**O.S.No.49/2012**

**Date:05.12.2018**

**வாதி தரப்பு சாட்சி 1 – மலையாண்டி என்ற ராசு, த-பெ. வீரணன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா இடத்தில் குடியில்லாமல் வேறு எங்கு குடியிருக்கிறேன் என்றால் இல்லை தாவா இடத்தில் தான் குடியிருக்கிறேன். தாவா இடத்தில் குடியில்லை என்றும் என் வீட்டிற்கு மேற்குப்புறத்தில் உள்ள வேறு வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடம் குடியிருக்க தகுதியில்லாத சேதமடைந்து குடியிருக்க லாயக்கற்ற நிலையில் இருக்கிறது என்றால் சரியல்ல. என்வீடு மேற்குபார்த்த வாசல் வீடு என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு அடுத்தடுத்து ஒட்டினாற்போல் வீடு உள்ளது என்றால் எங்கள் காம்பவுண்டு சுவர் ஒட்டி வீடு உள்ளது. அதை தாண்டி தொடர்ச்சியாக இல்லை. என் வீட்டில் சர்வே எண்.318ல் 24 ஓட்டு வீடு. என் வீட்டிற்கு கிழக்குப்புறத்தில் 4ம் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கும் 4ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் தென்வடலாக தனி சர்வே எண்ணில் இடம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. என் வீட்டிற்கு தென் வடலில் உள்ள வீட்டிற்கும் என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள வீட்டிற்கும் மழைநீர் 318/28-ன் வழியாக தான் செல்கிறதா என்றால் எங்களுடைய மழைநீர் மட்டும் தான் செல்லும். 318/28 என்பது சந்து என்றும் அது என் வீடு மற்றும் சுற்றியுள்ள வீடுகளிலிருந்தும் மழைநீர் அதன் வழியாக தான் செல்லும் என்றால் சரியல்ல. என் வீட்டின் அளவுகள் கிழமேல 28 தென்வடல் 18 ஆகும். என் வீட்டிற்கும் காம்பவுண்டு சுவருக்கும் இடையில் உள்ள காலியிடம் நாலாபக்கமும் எவ்வளவு இருக்கிறது என்றால் மேல்பக்கம் 18 அடி, கீழ்பககம் 18 அடி வடபக்கமும் தென்பக்கமும் காலியிடம் இல்லை. காம்பவுண்டு சுவர்தான் உள்ளது. என் வீட்டை சுற்றி நான்குபுறமும் கேட் எதுவும் போட்டிருக்கிறேனா என்றால் கேட் எதுவும் போடவில்லை. காம்பவுண்டு சுவர் எத்தனை அடி உள்ளது என்றால் கிழக்கு பக்கம் 18 அடி நீளம் உயரம் 6 அடி உள்ளது. காம்பவுண்டு சுவர் எதில் கட்டியிருக்கிறீர்கள் என்றால் ஹாலோபிளாக் கல்லில் கட்டியுள்ளது. சமார் 35 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையான காம்பவுண்டு சுவர் எனக்கு வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 50 இருக்கும் 4ம் பிரதிவாதிக்கு வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 85 இருக்கும். உள்ளாட்சித் தேர்தலில் நான் ஒருவருக்காக வேலை பார்த்தேன் 4-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதிக்காக வேலை பார்த்தார் என்றால் சரிதான். நான் அய்யாவுக்காக வேலை பார்க்க கூடாது என்று 4-ம் பிரதிவாதி மிரட்டினார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி 85 வயதுடையவர் என்றும் அவர் மிரட்டினார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கா வேலை பார்த்த காரணத்திற்காக சந்தாக உள்ள 318/28ல் சந்தாக மட்டுமே அடைத்து வைத்துள்ளேன் என்றும் மழைநீர் மற்றும் கழிவுநீர் போகாத வண்ணம் அடைத்து வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காம்பவுண்டு சுவர் எனக்கு எதுவும் இல்லை

என்றும் 8 ஹாலோபிளாக் கல்லை மட்டும் வைத்து சந்தின் குறுக்கே அடைத்து வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக ஊராட்சி மன்றத்தில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள் அதன்பின்னிட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>7-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் நான் காம்பவுண்டு சுவர் எழுப்பி உள்ளேன். அதற்கு ஊராட்சி மன்றத்தில் அறிவுப்பு கொடுத்ததன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செயதுள்ளேன். தாவா சொத்தில் எத்தனை இலக்க சொத்துக்கள் காண்பித்துள்ளீர்கள் என்றால் இரண்டு இலக்க சொத்துக்கள். இரண்டு இலக்க சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1வது இலக்கமாக சொல்லியுள்ளது 318/24ல் இருக்கக்கூடிய வீடாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 318/24 விஸ்தீரணம் கிராமக் கணக்கில் 17 சதுர மீட்டர் உள்ளதாக என்னுடைய வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 17 சதுர மீட்டர் என்றால் எத்தனை சதுர அடி என்று தெரியுமா என்றால் தெரியாது. 17 சதுர மீட்டர் என்பது 183 சதுர அடி என்றால் தெரியாது. இந்த 1வது இலக்க சொத்து 318/24ல் எந்த வருடத்தில் வீடு கட்டப்பட்டது என்றால் தெரியாது. ஆரம்ப காலத்திலிருந்து வீட்டு வரி கட்டி வருகிறீர்களா என்றால் கட்டி வருகிறேன். இந்த 318/24 உள்ள வீட்டிற்கு வரி ரசீது எதுவும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. 2வது இலக்கமாக சொல்லியிருக்கும் தாவா இடத்தின் புல எண் 318/28 ஆகும். 2வது இலக்க 318/28 புல சொத்து கிராமக் கணக்குகளில் எவ்வாறாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ள அடங்கல் பதிவேடு என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் 318/28 ஆவணம் குறித்த விவரம் உள்ளது என்றால் சரிதான். இந்த 318/28 புல சொத்து 33 சதுர மீட்டர் பரப்பு கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். 318/28ல் சந்து என்று உள்ளதா என்றால் சரிதான். இந்த 318/28ல் தான் காம்பவுண்டு சுவர் இருப்பதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க 318/24ல் உள்ள ஓட்டு வீடு கட்டும்போதே காம்பவுண்டு சுவர் கட்டியதாக என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. காம்பவுண்டு சுவர் என்றால் தமிழில் சுற்றுச்சுவர் என்றால் சரிதான். சுற்றுச்சுவர் என்னுடைய 318/24-ல் இல்லை என்றால் அதில்தான் உள்ளது. என்னுடைய பிராதில் காம்பவுண்டு சுவர் 318/28 புலஸ்தலத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தேர்தல் முன்விரோதம் காரணமாக தாவா ஏற்பட்டதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1வது இலக்க 318/24ல் ஓட்டு வீட்டிற்கு மேற்கே தென்வடல் பாதை என்று கிராமக் கணக்கில் உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் நான் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 318/22 பாதை என உட்பிரிவாகியுள்ளது என்றால் இருக்கிறது. 3-ம் பிரதிவாதி எனக்கு அரசு நிலத்தில் காம்பவுண்டு சுவர் கட்டியிருப்பதாக அறிவுப்பு கொடுத்ததார்களா என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதியிடமோ அல்லது 3-ம் பிரதிவாதியிடமோ

அந்த அறிவிப்பிற்கு நான் நேரடியாக விளக்கம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பிராது 6வது பாராவில் 318/28 புலஸ்தலம் சந்து எனவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். 318/28-ல்தான் நான் காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய சொத்து விபரத்தில் கிழக்கு என்ன இருக்கிறது என்றால் காலியிடம் இருக்கிறது. காலியிடமாக சொல்லப்பட்டுள்ளது கிராமக் கணக்கில் தென்வடல் சந்து என தீர்வாகியுள்ளது என்றால் இருக்கிறது ஆனால் தாண்டி உள்ளது. தாவா 1வது இலக்கச் சொத்திற்கு மேற்கே என்ன இருக்கிறது என்றால் காலியிடம் உள்ளது. அரசுக்கு பாத்தியப்பட்டதா அல்லது தனியாருக்கு பாத்தியப்பட்டதா என்றால் தெரியாது. அந்த இடம் தான் சர்வே எண் 318/22 என்றால் சரிதான். என்னுடைய 1வது இலக்க சொத்து ஓட்டு வீட்டிற்கு வடக்கே கோட்டைவீரன் வீடு உள்ளதா என்றால் சரிதான். தெற்கே பா.வீரணன் வீடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஓட்டு வீடு மேற்கு பார்த்த வாசல் வீடு என்றால் சரிதான். 1வது இலக்க எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் வீட்டிற்கு நேர் எதிரே காலியிடம் ஒய்யம்மாள் கோவில் உ்ளளது என்றால் சரிதான். ஒய்யம்மாள் கோவில் வீட்டிற்கு செல்வதற்கு பாதையாக பயன்படுத்துகிறார்கள் என்றால் கோவிலுக்கென்று தனி பாதை உள்ளது. மேற்படி தனி பாதை எந்த பக்கம் உள்ளது என்றால் கோவில் வீட்டிற்கு தென்வடல் வீதி உள்ளது என்றால் சரிதான். ஒய்யம்மாள் கோவில் வீட்டிற்கு முன்புறம் என்ன இருக்கிறது என்றால் காலியிடம் உள்ளது. அந்த முன்புறம் உள்ள காலியிடம் தான் சர்வே எண் 318/22ல் உள்ளது என்றால் தெரியாது. 318/24ல் உள்ள ஓட்டு வீட்டிற்கு தென்புறம் என்ன இருக்கிறது என்றால் கோட்டைவீரன், மந்தைவீரன், சின்னண்ணன் ஆகியோர் வீடு உள்ளது. என் வீட்டிற்கு பின்புறம் எ.ஒ.கே. கருப்பணன் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி எ.ஒ.கே. கருப்பணன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில் சந்து உள்ளதா என்றால் சந்து உள்ளது. அந்த சந்து தென்வடல் சந்து என்றால் சரிதான். அந்த சந்தை என்னுடைய பிராதில் காலியிடம் என வேண்டுமென்றே குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா இடத்திற்கு மேற்கே உள்ள 318/22 புலஸ்தலம் பாதை என்பதை மறைத்து வேண்டுமென்றே காலியிடம் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றால் சரிதான். தாவா காம்பவுண்டு சுவர் எத்தனை அடி அகலம் உள்ளது என்றால் 1 1/2 அடி. காம்பவுண்டு சுவர் என் வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் வடக்கு நோக்கி உள்ளது. என்னுடைய பிராதில் காம்பவுண்டு சுவர் மேற்கு திசையில் வடக்கு நோக்கி உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 7-ம் பிரதிவாதி எதிர்கோருரிமை போட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் 318/28 புலஸ்தலத்திலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக 7-ம் பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் செய்திருக்கிறேன். ஆதிகாலத்திலிருந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளோம். இந்த வழக்கு காம்பவுண்டு சுவரை பாதுகாக்க தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகளை சேர்த்துள்ளேன் என்றால் இரண்டு பேர். 318/28 புலஸ்தலம் சம்பந்தமாக ஏற்கெனவே வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பிராது சங்கதிகளில்

குறிப்பிட்டு 7-ம் பிரதிவாதி மீது எந்தவித வழக்கு மூலமும் சொல்லவில்லை என்றால் நான் வழக்கில் சொல்லவில்லை ஆனால் பிடிக்காது. நான் பரிகாரம் கேட்டுள்ள 2வது இலக்க சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் அரசாங்கத்திற்கு இருக்கலாம். 318/22 லக்கத்திலேயோ 318/28 லக்கத்திலேயோ கிராமக் கணக்குகளில் எனது பெயர் இடம் பெறவில்லை என்றால் தெரியாது. நான் தனிநபர்களுக்கெதிராகவும், என்னுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக வழக்கு காரணி ஏற்படாத நிலையில் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ள காரணத்தினாலும் வழக்கு மூலமாக சொல்லியுள்ள சங்கதிகளை ஆவணப்பூர்வமாக ரூசுப்படுத்த தகுந்த சாட்சியங்களை முன்வைக்கப்படாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.